REGD. No. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 5] சென்னை : கார்த்திகை 8உ சனி (23—11—57) ★ ★ வெளியூர் : கார்த்திகை 9உ ஞாயிறு (24—11—57) [இதழ் 139

மாணவ-மாணவிகளுக்கு பஸ்கட்டணமில்லை

பஞ்சாப் சர்க்காரின் 'நல்ல முடிவு'

சந்திகார், நவ. 22—

அரசாங்கம் நடத்திவரும் பஸ் போக்குவரத்தில் 12 வயதிற்குக் குறைந்த மாணவ—மாணவிகளை இலவசமாக ஏற்றிச் செல்ல பஞ்சாப் அரசாங்கம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

ஏழைக் குழந்தைகளின் கல்வி முன்னேற்றத்தைக் கருதியும், பெற்றோர்களின் பொருளாதார நிலையைக் கருதியும் இந்த நல்ல முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவை உடனடியாக அமுல் செய்யுமாறு உத்தரவிடப்பட்டுவிட்டதாம்.

'பெரிய திட்டங்கள் எதற்கும் தென்னாடு சேர்த்துக் கொள்ளப்படவில்லை'

'வட நாட்டுவளர்ச்சியுடன்ஒப்பிட்டால் தென்னாட்டில் எதுவுமே இல்லை'

இந்த இலட்சணத்தில் நெய்வேலித் திட்டத்திற்கும் ஆபத்தா?

'தாயக'மாம் தென்னாட்டை டி.டி.கே. நினைவு கொள்ளவேண்டும்

'மெயில்' இதழ் தரும் எச்சரிக்கை

"இரண்டாம் திட்டத்தைத் திருத்தி அமைக்கவேண்டியதுதான்; வேறுவழியில்லை; ஆனால், அப்படித் திருத்தி அமைக்கும்போது, முன்னேற்றத்திற்குச் சமசந்தர்ப்பம் வேண்டும் என்பதைப்போல, நஷ்டப்படுவதிலும் சமத்துவம் இருக்கவேண்டும்"

என்று, 'ஐந்தாண்டுத் திட்டம் வெட்டப்படுமானால், தென்னாட்டுத் திட்டங்களுக்குப் பாதகம் ஏற்படக்கூடாது' என எச்சரித்துள்ளது, சென்னை ஆங்கில தினசரியான 'மெயில்'.

22—11—57 அன்று 'இரண்டாம் திட்டம்' என்ற தலைப்பில் காணப்படும் அந்தக் கருத்தினைக் கீழே தருகிறோம் :—

"...ஆனால் நிதி மந்திரியின் பேச்சு, தென்னிந்தியாவைப் பொறுத்து, விசேட முக்கியத்துவம் உடையதாகும்.

"மூன்று உரத் தொழிற்சாலைகளில் இரண்டினை ஒத்திவைக்க வேண்டியிருக்குமென அவர் ஒளிவு மறைவின்றிக் கூறியிருக்கிறார்.

"அவற்றில் ஒன்று தென்னாட்டில் நிறுவப்படுவதாக இருந்தது; அது இப்போது இந்தத் திட்டத்தில் வாராதோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

"சில மின்சார உற்பத்தித் திட்டங்களைக்கூட ஒத்திவைக்க வேண்டிவரும் என்றும் அவர் கூறியிருக்கிறார். சென்னையைப் பொறுத்து, உத்தேசிக்கப்பட்டுள்ள முக்கியமான பெரிய திட்டம் எல்லாம், நெய்வேலி பழுப்பு நிலக்கரித் திட்ட அபிவிருத்தியைப் பொறுத்ததுதான்; சர்க்கார் மனதில் கொண்டுள்ள திட்டங்களுள் இதுவும் ஒன்றாயிருக்க முடியாது எனச் சொல்வதற்கு இல்லை.

"வடநாட்டில் ஏற்பட்டுவரும் வளர்ச்சியோடு ஒப்பிட்டால், தென்னாட்டிற்கு எதுவுமே கிடைக்கவில்லை.

"பேசப்படுகிற சில திட்டங்கள் கூட இந்தப் பிரதேசத்தினது தேவைகளின் மேல் தளத்தைத் தான் தொடக்கூடியன.

"கடைசியாகத் தோன்றியுள்ள நிலைகள், ஏற்கனவே உள்ள எதிர்காலத்தின் உறுதியற்ற தன்மையை மேலும் கடுமையாக்குகின்றன,

"சர்க்கார்—மேற்கொண்ட எந்தப் பெரிய திட்டத்திற்கும் தென்னாடு கணக்கில் எடுத்துக் கொள்ளப்படவில்லை; நெய்வேலி ஒன்று தான் விதிவிலக்கு; அதுவும்கூட இந்த ஐந்து ஆண்டுகளில் முடியும் என எதிர்பார்க்கப்படவில்லை

"மேலும், இப்போது, திட்டத்தின் பிரதான அம்சங்களுக்கே மு... விடம் என்பதால் சென்னை க... விக்கப்படும் என்று தோன்... வில்லை.

"தனது 'தாயகம்' நினைவி... ருக்க வேண்டுமென, தெ... னாட்டின்மீது பற்று த... கொண்ட நிதி அமைச்சருக்... எடுத்துரைக்கப்படலாம்.

"திட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டியதுதான்; அதைத் தவிர வேறு வ... இல்லை; ஆனால், முன்னேற்... தற்குச் சம சந்தர்ப்பங்க... வேண்டுமென்பதைப் போ... நஷ்டப்படுவதிலும் பல... க்கு சம பங்கு இருக்கவே... டும்.

"பலவீனமானவர்களுக்கு ... சலுகைகளாற்றுக்கிடப்போ... கும் முடிந்த அளவு அ... பட்ச வாய்ப்புகளைப் பெற... தருவதும், நாட்டின் எல்லா... பாகங்களும் சமமான வளர்... யைப் பெறச் செய்வதும்தா... திட்டத்தின் நோக்கம் என்... திட்ட முன்னுரையில் கூற... பட்டிருப்பதை ஒருபோது... மறந்துவிடக்கூடாது."

பர்மாவுடன் எல்லைத் தகராறு

'ஏற்பட முடியாதது' என்கிறார் நேரு

புதுடில்லி, நவ. 22—

பர்மிய எல்லைக்குள் இந்திய இராணுவத்தினர் அத்துமீறி நுழைந்ததாக பர்மியப் பத்திரிகைகள் சிலவற்றில் செய்தி வெளியிடப்பட்டது என்றும், அவற்றில் கண்டுள்ள நாகமலைப் பகுதியில் உள்ள லாங்குவா திங்கா என்ற கிராமத்தைப் பார்வையிட இரு சர்க்கார் பிரதிநிதிகளும் கொண்ட கூட்டுக் குழு ஒன்றினை அனுப்பிவைக்க இருசர்க்கார்களும் ஒப்புக் கொண்டிருப்பதாகவும், வெளிவிவகார இலாகா உதவி மந்திரி திருமதி இலட்சுமிமேனன் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

தொடர்ந்து எழுந்த பல உப கேள்விகளுக்குப் பதிலளித்த நேரு, 'இந்தியாவுக்கும்—பர்மாவுக்குமிடையே, எந்தவித எல்லைத் தகராறும் இருக்க முடியாது; பர்மியப் பிரதமரே அங்கு செல்லலாம்; அவர் கண்டு கூறுவதை நாம் ஏற்கத் தயாராக இருக்கிறோம்; இதுபோன்ற சில்லறைச் சச்சரவுகள் கண்டு நாம் ஆத்திரப்படக்கூடாத அளவுக்கு பர்மாவுடன் நமது உறவுகள் உள்ளன; என்று கூறியிருக்கிறார்.

இந்து மகாசபைத் தலைவருக்கு மாதச்சம்பளம்

தனிநபர் மசோதா மக்கள் சபையில் தோல்வி

சர்க்கார் போக்கைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

புதுடில்லி, நவ. 22—

இந்துமகாசபைத் தலைவர் சவர்க்கார், பிரேந்திரகுமார் கோஷ் (அரவிந்தரின் சோதரர்), டாக்டர் பூபேந்திரநாத் தத்தா (விவேகானந்தரின் சோதரர்) ஆகியோருக்கு, அவர்கள் நாட்டுக்குச் செய்திருக்கும் 'அரிய சேவை'யை மதிக்கும்வகையில், மாதம் ரூ. 500 சம்பளமாகத் தர வேண்டும் என்று கோரி ராஜா மகேந்திர பிரதாப் என்ற ஒரு உறுப்பினர், மசோதா ஒன்றினை மக்கள் சபையில் கொண்டுவந்தார்.

மசோதாவினைக் கொண்டுவருவதையே சர்க்கார் எதிர்த்தது.

மசோதா கொண்டுவரப்பட்டு தோற்றது; அதனை ஒட்டி, எதிர்க்கட்சியினர் பலரும் வெளிநடப்புச் செய்தனர்.

பணம் செலவிடுவது பற்றிய மசோதாக்கள் மக்கள் சபைக்கு வருமுன், குடியரசுத் தலைவரின் அனுமதி பெறவேண்டுமென்றுள்ள அரசியல் சட்ட விதியைக் காட்டி, உள்நாட்டிலாகா மந்திரி தத்தார், சட்ட மந்திரி சென் ஆகியோர், மசோதா கொண்டுவரப்படுவதையே எதிர்த்தனர்.

சபைத் தலைவராயிருந்த சர்தார் ஹுக்கம் சிங், 'அரசியல் சட்ட விதிகள், மசோதா புகுத்தப்படும் கட்டத்தில் குறுக்கே நிற்கமுடியாது' எனக்கூறி, சர்க்கார் தரப்பு எதிர்ப்பினை ஏற்றுக்கொள்ளாமல், மசோதாவினைக் கொண்டுவருமாறு கூறினர்.

பல காங்கிரஸ் உறுப்பினர்கள், ஒழுங்குப் பிரச்சினை எல்லாம் எழுப்பினர்.

பின்னர், வாக்கெடுப்பு வேண்டுமெனக் கோரினர் மந்திரிகளும், காங்கிரசாரும்!

வாக்கெடுப்பு நடைபெற்றது; 75 வாக்குகள் எதிராகவும், 48 வாக்குகள் ஆதரவாகவும் பதிவாயின; மசோதா நிராகரிக்கப்பட்டது.

தனி நபர்கள், மசோதா கொண்டுவருவதையே எதிர்க்கிற சர்க்காரின் போக்கைக் கண்டித்து, எதிர்க்கட்சியினர் வெளிநடந்தனர்.

ஒரிசாவில் மதுவிலக்கு

கைவிடப்படும் என்ற செய்தி மறுக்கப்படுகிறது

புதுடில்லி, நவ. 22—

ஒரிசா சர்க்கார் மதுவிலக்குத் திட்டத்தைக் கைவிடப்போவதாக வந்த செய்தியை மறுத்து, திட்டக்குழுவிற்கு அம்மாநில முதன்மந்திரி எழுதியிருப்பதாக மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

மக்களிடை நேர்மையும் ஒழுக்கமு... குன்றிவிட்டனவாம்!

மாணவர்கள்கூட அதிகார ஆசை... கொண்டவராயுள்ளனராம்

இலஞ்சப்பேயும் தாண்டவமாடுவதாக ஜெயப்பிரகாஷ் நாராயணன் வருத்...

"மக்கள் சரியான வழி நடந்தால், சர்க்கார் தவறான வழி நடக்கமுடியாது"

என்று பூதான இயக்கத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன், இராஜஸ்தானில் பாரன் ... இடத்தில் நடைபெற்ற கூட்... ஒன்றில் பேசுகையில் குறி... பிட்டாராம்.

"நாட்டில் இலஞ்சப்பே... தாண்டவமாடுகிறது. மக்க... ளின் நேர்மையும், ஒழுக்கமு... குன்றிவிட்டன; விளைவா... தேசீய வாழ்வில் எண்ணற்... தீமைகள் மலிந்துவிட்டன. நாம் நாட்டினைக் காப்பாற்ற, நாட்டிற்குச் சேவை புரிய விரும்பினால், இந்தத் தீமைகளை முதலில் ஒழித்தாக வேண்டும்"

என்றும் அவர் கூறிவிட்டு மே... பேசுகையில் சொன்னர் :—'நா... டிற்குச் சேவை செய்யவேண்... என்ற எண்ணம் அதிகார ஆ... யில் மூழ்கிவிட்டது என்... மாணவர்கள்கூட படித்து மு... ததும் தேச சேவையில் தம... குள்ள ஆச்சரியமான பங்... மறந்து, அரசியலில் ஈடுபட... விழைகின்றனர் —மந்திரி... களவோ, தலைவர்களவோ ஆ... விடவே ஆசைப்படுகின்றனர்."

தடுப்புக்காவல் சட்டத்தை ரத்து செய்ய....

மக்கள்சபையில் தனிநபர் மசோதா நிராகரிப்பு

சட்டத்தை நிறைவேற்றப் போவதாக மந்திரி தகவல்

புதுடில்லி, நவ. 22—

தடுப்புக் காவல் சட்டத்தை ரத்து செய்ய வேண்டுமெனக் கோரி நஷீர் பரூச்சா என்ற சுயேச்சை உறுப்பினர் மக்கள் சபையில் மசோதா ஒன்று கொண்டுவந்தார்.

'இதனை விவாதத்திற்கே எடுத்துக் கொள்ளக்கூடாது' என்று ஆளும்கட்சியினர் 104 வாக்குகள் அளித்தனர்; 'விவாதிக்கவேண்டும்' என்று எதிர்க்கட்சியினர் 38 வாக்குகள் அளித்தனர்; மசோதா நிராகரிக்கப்பட்டது.

'வெட்கம் வெட்கம்' என எதிர்க்கட்சியினர் கூவினர்.

மசோதாவை எதிர்த்த உள்நாட்டிலாகா மந்திரி பி. என். தத்தார், 'இந்தத் தடுப்புக் காவல் சட்டத்தின் ஆயுளை நீடிப்பதற்காக சீக்கிரமே மசோதா ஒன்று கொண்டுவரப்போவதாக பிரதமர் ஏற்கனவே அறிவித்திருக்கிறார்' என்று கூறினாராம்!

நம் நாடு

தி. மு. க. தினஇதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 23—11—57 சனி

விடுதலைப் பாதையில் ஒரு படி!

இந்து மதத்தைச் சார்ந்தவர்கள் எனச் சொல்லிக் கொள்ளப்படுகின்றவர்களிடை, அறிவுக்குப் பொருந்தாத, சமூக நலத்துக்கு ஊறுதருகின்ற எத்தனையோ பழக்கவழக்கங்கள் குடிபுகுந்துள்ளன. அந்தப் பழக்க வழக்கங்களுக்கு இந்து மதத்தைச் சார்ந்தவைகள் எனக் குறிப்பிடப்படுகின்ற சில நூற்களில் இருந்து ஆதாரங்களும் காட்டப்படுகின்றன. அந்த நூற்கள் அறநூற்களாகும் என்றும் சாற்றப்படுகின்றன. அந்த நூற்களில் கூறப்பட்டுள்ள சட்டங்களை 'தேவன்' தந்தவை; அவைகளை மீறிநடப்பது அறவழி ஆகாது என்றும் அச்சுறுத்தப்படுகின்றன.

'ஆண்டவனை'யும், அவன் தந்துள்ளவை எனக் காட்டப்படும் 'அறநூற்களை'யும்துணைக்கழைத்து, இன்றியமையாது தேவைப்படும் சமுதாய நலன்களைத் தடுத்து நிறுத்த வாதிடும் பழைமை மோகிகளான புத்திசாலிகளாலும், காலவேகத்துக்குச் சரணகதியடையாமல் இருக்க முடியாது. எவ்வளவுதான் பழைமையில் பற்று இருப்பதாக அவர்கள் நடித்தாலும், அவர்களால் அப்பழைமையைக் கட்டிக்காக்க முடிவதில்லை. எனவே, அவர்கள் கூறிடும் 'சாத்திரம்', 'தருமம்' அனைத்தும் வெறும் சொல்லளவுடன் நின்றுவிட வேண்டியதாகின்றன. புதுமைக்கு, அவர்களும் சொல்லளவில் எதிர்ப்புக் காட்டியவண்ணம் மெள்ள மெள்ள—ஆனால் நிச்சயமாக இறுதியில் பலியாகிவிடுகின்றனர். இருந்தாலும், தங்களாலேயே உமிழ்ந்துவிடப்பட்ட பழைமையின் சிறப்புப் பற்றி அவர்கள் பேசத் தவறுவதும் கிடையாது. இத்தகையவர்களை புதிய சமுதாயம் ஒதுக்கியே தள்ளிவிடும்—தள்ளியும் இருக்கிறது.

இத்தகு மாறுமனத்தினரின் மூர்க்கத்தனமான எதிர்ப்புகளுக்கிடையில்தான், சமுதாய சீர்திருத்தக்காரர்கள் பணிபுரிய வேண்டியதாக இருக்கிறது. இந்த மூட எதிர்ப்புகள் அனைத்தையும் எதிர்பார்த்தும், முறியடித்தும்தான் புதிய சமுதாயம் உருவெடுப்பதற்குரிய முன்னேற்பாடுகளை, சமுதாய சீர்திருத்தக்காரர்கள் அமைத்து வருகின்றனர். அவர்கள் ஆற்றிய அரும்பணியின் விளைவாகத்தான், சமுதாய நல்வளர்ச்சிக்குத் தடைகளாக உள்ள கேடுகளைக்களைய சட்டம் இயற்றப்படுகிறது. இத்தகு சமுதாய நலன்களைப் பாதுகாக்கின்ற சட்டம் ஒன்று இயற்றப்படுகின்ற பொழுதெல்லாம், 'அறநூல்' காப்பாளர்கள் வாய்மூடி இருப்பது கிடையாது. சட்டத்தை எதிர்த்து 'அறநூல்' கடைகளைத் திறந்துள்ளனர் எதிர்ப்பாளர்கள். கூட்டம் போட்டுக் கூவி உள்ளனர்—கொக்கரித்துள்ளனர். இருந்தாலும், சீர்திருத்தத்துக்கே இறுதியில் வெற்றி ஏற்பட்டு இருக்கிறது.

பொட்டுக் கட்டும் இழிவு நிரம்பிய தீயபழக்கத்தை அறவே ஒழித்துக்கட்ட சென்னையில் சட்டமியற்றப்பட்டபொழுதும், வைதீகப் வாயடங்கி எதிர்ப்புக் காட்டாமல் இருக்கவில்லை. மதப் போச்சு, நாத்தீகம் பேசலாச்சு என்றெல்லாம் வைதீகம் கத்தத்தான் கத்தியது.

இதுபோன்றே, இளமணத் தடைச் சட்டம் ஒன்றை டில்லி சட்டசபையில் அன்று நிறைவேற்றியபொழுதும், வைதீகப் வாய்கிழியத்தான் கூக்குரலிட்டது இருந்தாலும் சட்டம் நிறைவேறியது.

இப்போது ஆந்திர சட்டசபை, நாம் அனைவரும் பாராட்டி வரவேற்கத்தகுந்த சட்டம் ஒன்றை நிறைவேற்றி இருக்கிறது. அந்தச் சட்டம் வரதட்சணைக் கொடுமையைத் தடுத்து நிறுத்த இயற்றப்பட்டுள்ளதாகும். அச்சட்டத்தை இயற்ற பெரிதும் பொறுப்பாளியாக இருந்தவர் ஆந்திர சட்டசபைத் தலைவரேயாவர் எனத் தெரியவருகிறது. அவர் சாதாரண சட்டசபை உறுப்பினராக இருந்தபொழுது அவரால் கொண்டுவரப்பட்டதாகும் அம்மசோதா. அது இன்று சட்டமாக நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

அந்தச் சட்டத்தின்படி, திருமணத்தின்போதும், திருமணத்தின் முன்பும் பின்பும் வரதட்சணை கொடுக்கவோ வாங்கவோ கூடாது என்பதாகும். இந்தச் சட்டத்தை மீறுகிறவர்களுக்கு ஆறுமாதம்வரை சிறைவாசமும், ஆயிரம் ரூபாய்வரை அபராதமும் விதிக்கப்படும் என்றும் சட்டம் குறிப்பிடுகிறது.

இந்தச் சட்டம் எந்த அளவு வரதட்சணைக் கொடுமையை இல்லாது ஒழிக்கப் பயன்படும் என்பதை இப்பொழுது வரையறுத்துக் கூற முடியாது. இதை எந்த அளவு அக்கறையுடன் ஆந்திர அரசாங்கம் செயல்படுத்த முன்வருகிறதோ, அதையொட்டித்தான் சட்டத்தின் பலாபலனும் இருக்க முடியும்.

சட்டத்தின் மூலம் எதிர்பார்க்கின்ற முழுப் பலனும் உடனடியாக சமுதாயத்திற்குக் கிடைக்க முடியாது என்றாலும், காலப்போக்கில் முழுப் பலன் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை. வரதட்சணைக் கொடுமைக்கு ஆந்திர மாநில அரசாங்கம் சாவுமணி அடித்துவிட்டது. ஆந்திரப் பெண் குலம், விடுதலைப் பாதையில் ஒருபடி முன்னேறி இருக்கிறது என்ற உண்மையைத்தான் இந்த வரதட்சணைத் தடுப்பு சட்டம் எடுத்துக் காட்டுகிறது. சட்டமியற்ற முன்நின்ற அனைவரும், பெண் குலத்தின் பாராட்டுதலுக்கு உரியவராவர்.

அவசியமில்லை என்று கருதிவிட்டனராம்!

புதுடில்லி, நவ. 22—

"அவசியமில்லை என்று கருதப்பட்டதால், ஓமியோபதி விஞ்ஞான வளர்ச்சிக்காக நிபுணர் ஒருவரை ஆலோசகராக நியமிக்கவில்லை" என்று மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிற்கு அமெரிக்க உதவி!

டெல்லிப் பெரியவர்களின் நம்பிக்கை நாசமாகிறது

60 கோடி டாலர் கிடைக்காது: உத்தேசமே 15 கோடி டாலர் கடன்தானும்!

வாஷிங்டன், நவ. 21—

இந்தியாவிற்கு விசேடமான உதவி தருவதற்கென ஐசனோவர், காங்கிரசின் அனுமதி கோரமாட்டார் என்று தெரியவருகிறது.

முன்பு, ஒரு பெரிய தொகையைக் கடனாகத் தருவதற்காக ஐசனோவர், அமெரிக்கக் காங்கிரசை அனுமதி கேட்பார் என்று செய்திகள் வெளியாகியிருந்தன.

அமெரிக்க இராஜாங்க இலாகா இந்தியாவின் அன்னியச் செலாவணி கஷ்டங்களையும், பொருளாதார நெருக்கடிகளையும், ஆராய்ந்தபின், 60 கோடி டாலர் வரை உதவ வேண்டுமெனச் சிபாரிசு செய்திருந்தது.

ஆனால் இப்போது, இப்படி விசேடமாக இந்தியாவிற்கு உதவுவதற்கு இல்லை என்று முடிவு செய்து, அதற்காகக் காங்கிரசின் அனுமதி பெறுவது என்ற திட்டத்தையும் ஐசனோவர் கைவிட்டுவிட்டதாகவும் கூறப்படுகிறது.

இந்தியாவுக்கு சுமார் 15 கோடி டாலர் கடனாக உதவ மட்டுமே ஐசனோவர் திட்டமிட்டிருக்கிறாராம்.

'இதற்குக் காரணம், காங்கிரஸ் முன்னையத் திட்டத்திற்கு அனுமதி மறுத்துவிடக்கூடும் என்று ஜனாதிபதி அஞ்சுவதுதான்' என்று இராஜாங்க இலாகா தெரிவிக்கிறது.

"ரஷ்யாவுடன் வானவெளிப் பயணம் பற்றிய போட்டியிலும், கெடுபிடி யுத்தத்திலும் ஈடுபட்டிருக்கும் சூழ்நிலையில், 60 கோடி டாலர்வரை உதவுவது என்பது காங்கிரஸ் அனுமதிக்க முடியாததாயிருக்கும்" என்றும் ராஜாங்க இலாகா கூறுகிறதாம்.

அரிசி தவுட்டிலிருந்து எண்ணெய் தயாரிப்பு

சத்துள்ள 'வைட்டமின்' இருப்பதாகக் கண்டுபிடிப்பு

பெங்களூர், நவ. 22—

அரிசி தவுட்டிலிருந்து சமையல் எண்ணெய் தயாரிப்பதற்கான ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பது பற்றி மைசூர் அரசாங்கம் ஆராய்ந்து வருகிறதாம்!

இதில் சத்துள்ள 'வைட்டமின்' இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சாலைக்கு ரூ. 5 இலட்சம் செலவாகும் என்று கூறப்படுகிறது.

இப்போது ஜப்பான் நாட்டில் மட்டுமே இந்த எண்ணெய் தயாரிக்கப்படுகிறதாம்!

அமெரிக்க அரிசி வாங்கி விற்றதில் ரூ. 4 கோடி நஷ்டம்!

மக்கள்சபையில் அமைச்சர்தகவல்

புதுடில்லி, நவ. 21—

1956—57-ம் ஆண்டில் இந்திய சர்க்கார், அமெரிக்காவிடமிருந்து 1 93,700 டன் அரிசி இறக்குமதி செய்ததாக உதவி உணவு மந்திரி மக்கள் சபையில் தெரிவித்தார்.

கேள்வி ஒன்றுக்கு பதிலளித்த அவர், இதில், ஏற்கனவே 1,18,600 டன் விற்றுவிட்டதாகவும் தெரிவித்தார்.

இந்த அரிசி வியாபாரத்தினால் ரூ. 4,32,00,000 சர்க்காருக்கு நஷ்டம் ஏற்பட்டதாகவும் அவர் கூறினாராம்.

"அமெரிக்க அரிசி விற்றதில் சர்க்காருக்கு இவ்வளவு நஷ்டம் ஏற்படுவானேன்?" என்று, டாக்டர் சுசீலாநாயர் கேட்டார்.

"நஷ்டம் என்பது தேசிய நஷ்டம்தான்; உண்மையில் மணங்கு 31 ரூபாய்தான் அரிசிக்கு விலை என்றாலும், அமெரிக்காவிற்கு அதைவிடக் குறைவாகத்தான் கொடுத்தோம்; அதாவது, பர்மா அரிசி இறக்குமதி செய்யப்பட்ட விலைதான் கொடுத்தோம்; எனவே அமெரிக்காவுடன் பேரத்தில் எந்தவித நஷ்டமும் ஏற்படவில்லை" என்று உணவு மந்திரி ஜெயின் கூறியிருக்கிறார்.

மின்சார உர உற்பத்தித் திட்டங்கள் வெட்டப்படும்!

'பட்ஜெட்' கூட்டத்தின்போது புதிய உருவம் காணமுடியுமாம்

இரண்டாம் திட்ட விவாதத்திற்கு டி. டி. கே. பதில்

புதுடில்லி, நவ. 21—

நெருக்கடிகள் தோன்றியபோதிலும், உடனடியாகக் கஷ்டங்கள் இருந்தாலும், அன்னிய உதவி கிடைக்காமற்போனாலும், திட்டத்தின் முதல் இலட்சிய அளவை ஈடேற்றிவிட டெல்லி சர்க்கார் முயற்சிக்குமாம்!

மக்கள் சபையில் ஐந்தாண்டுத் திட்ட விவாதத்திற்குப் பதிலளித்த நிதி மந்திரி கிருஷ்ணமாச்சாரி மேற்கண்டவாறு கூறியதுடன், உத்தேசிக்கப்பட்டுள்ளபடி ரூ. 4 800 கோடியும் திட்டத்திற்காகச் செலவிடப்படும் என்றும், முன்பு எதிர்பார்த்தபடி பற்றாக்குறை நிதி நிலைமை ரூ. 1,200 கோடி அளவினதாக இராது என்றும், அதனை ரூ. 900 கோடி அளவினதாகக் குறைத்துவிட உத்தேசித்திருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்.

திட்டக்குழு, இப்போது திட்டத்தினை மாற்றியமைப்பது பற்றி யோசித்து வருவதாகவும், அடுத்த பட்ஜெட் கூட்டத்தின்போது திட்டத்தின் புதிய உருவத்தைக் காணலாம் என்றும், அப்போது எந்த எந்தத் திட்டங்களைக் கைவிடுவது என்பது பற்றி தெளிவு ஏற்படும் என்றும், உத்தேசிக்கப்பட்டுள்ள மூன்று உர உற்பத்தித் தொழிற்சாலைகளில் ஒன்று அல்லது இரண்டையும், சில மின்சார உற்பத்தித் திட்டங்களையும் கைவிட்டுவிடவேண்டியிருக்கும் என்றும், அதன் பிறகும்கூட நமது அன்னியச் செலாவணிக் கஷ்டம் கணிசமானதாக இருக்கும் என்றும் கிருஷ்ணமாச்சாரி கூறியிருக்கிறார்.

நெய்வேலி சூட்டு மின்சார நிலையம்

எல்லா உதவிகளையும் ரஷ்யா தருமெனத் தகவல்

புதுடில்லி, நவ. 22—

இந்தியாவுக்கும் — ரஷ்யாவுக்கும் 1957-ம் ஆண்டு நவம்பர் திங்களில் ஏற்பட்ட உடன்பாட்டின்படி, நெய்வேலி சூட்டு மின்சார நிலையத்திற்குத் தேவையான சாதனங்களையும், உதவிகளையும் ரஷ்யா தரும் என்றும், இங்கு மின்சார உற்பத்திசக்தி 2,11,000 கிலோவாட்டிலிருந்து, 2,50,000 கிலோவாட்டாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்றும், தேவையான இயந்திரங்களின் மொத்த மதிப்பு ரூ 21·62 கோடி என்றும் மக்கள் சபையில் அமைச்சர் சுவர்ணசிங் தெரிவித்துள்ளார்.

இயந்திரக் கருவி தொழிலுக்கு நிதி உதவி!

புதுடில்லி, நவ. 22—

'தேசியத் தொழில் வளர்ச்சிக் கார்ப்பரேஷன்' இயந்திரக் கருவித் தொழிலுக்கு நிதி உதவி அளிக்கக்கூடுமென்றும், அந்நிறுவனம் இதுவரையில் 11 சணல்ஆலைகளுக்கு சீரமைப்புக்காகவும், நவீன இயந்திர சாதன அமைப்பு வேலைகளுக்காகவும் மொத்தம் ரூ. 2·36 கோடியும் அதே காரியத்துக்காக எழு துணி ஆலைகளுக்கு ரூ. 1·66 கோடியும் கடன் தொகைகள் அனுமதித்திருக்கிறது என்றும் மக்கள் சபையில் தொழில் அமைச்சர் கூறினார்.

ஒத்திவைப்புப் பிரேரணை தோல்வி எதிரொலி

ஆந்திர சட்டசபையில் எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

ஐதராபாத், நவ. 21—

உஸ்மானியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த நான்காம் பிரிவு ஊழியர்கள் சுமார் 4 000 பேர் நேற்று முதல் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதைப்பற்றி விவாதிக்க சபை நடவடிக்கைகளை ஒத்திவைக்க வேண்டுமென கொண்டுவரப்பட்ட பிரேரணையை சபைத் தலைவர் நிராகரித்ததால் 26 எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இன்று வெளிநடப்பு செய்திருக்கின்றனர்.

பிரேரணையைக் கொண்டுவந்தவர் சோஷலிஸ்டுக் கட்சியைச் சேர்ந்த பி. நரசிங்காராவ் என்பவர்.

இவரது சோஷலிஸ்டுக் கட்சித் தலைமையில் இயங்கும் சங்கத்தவர்தான் வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

ரூ. 100-க்குக் குறைவாகச் சம்பளம் வாங்கும் சர்க்கார் ஊழியருக்குத் தரப்பட்ட ரூ. 6 பஞ்சப்படி உயர்வு, இந்தத் தொழிலாளருக்கும் தரப்படவேண்டும் என்பது கோரிக்கை.

இதுபற்றி சர்க்கார் கூறுவது எல்லாம், பல்கலைக் கழகம் சர்க்காருக்குக் கட்டுப்பட்டதல்லவென்றும், சுயேச்சையாக இயங்குவதாகவும், சர்க்கார், மானியம் மட்டும் கொடுத்துவருகின்றனரென்றும், எனவே, பஞ்சப்படி உயர்வு தருமாறு பல்கலைக் கழகத்தை சர்க்கார் கேட்க முடியாதென்றும், கேட்டால் அவர்கள் திரும்ப நம்மிடமே அந்த தொகையைக் கேட்பர் என்பதும்தான்.

மேலும், 'சபையின் நடவடிக்கைகளை ஒத்திவைக்கவேண்டிய அளவு இது ஒன்றும் முக்கியமானதல்ல' என்று கல்வி மந்திரி கூறியிருக்கிறார்.

அதன்பேரிலேயே சபைத் தலைவர் பிரேரணையை நிராகரித்தார்.

சென்னை-மடுவின்கரை மேட்டுபாளையத்தில் தமிழ் வளர்ச்சி மன்றத் துவக்க விழா

க.அன்பழகன் கலந்துகொண்டார்

தமிழ் வளர்ச்சி மன்றத் துவக்க விழா 14—11—57 மாலை 6 மணிக்கு தோழர் எம். ரங்கநாதன் தலைமையில் நடைபெற்றது; தலைவர் தம் முன்னுரையில் நாட்டின் மொழி நிலைமைகள் பற்றியும், தமிழ் மொழி வளர்ச்சியுறவேண்டிய அவசியம் பற்றியும் பேசினர்.

தோழர் அ. ச. நடராசன், தமிழ் இலக்கியத்தின் சிறப்பையும், சங்ககாலத் தமிழ்க் கவிதைகளையும் தெளிவுபட எடுத்துச் சொல்லி தமிழ் மொழி சிறப்பிக்கப்பட நாம் செய்யவேண்டிய பணிகளையும் குறித்துப் பேசினர்.

தோழர் கே. எஸ். புகாரி பேசுகையில், தமிழ் வளர்ச்சி மன்றத்தின் நோக்கம் பற்றியும், அதற்கும் தி. மு. கழகத்திற்கும் உள்ள தொடர்பு பற்றியும் விவரித்தார்.

இறுதியாகப் பேசிய தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள், தமிழுக்கு இழுக்கு வரும் நிலை குறித்தும், தமிழ் நாட்டில் இந்தி வெறி அடியெடுத்து வைக்கின்ற அவல நிலையை விவரித்தும், இந்தி தமிழ் நாட்டில் புகுத்தப்பட்டால் தமிழ் மக்கள் அடிமைப்பட நேருமென்பதையும், அப்படி அடிமையாகாமல் நம்மைக் காத்துக்கொள்ளுவதற்கு இத்தகைய தமிழ் வளர்ச்சி மன்றங்கள் மூலம்தான் நமது தாய் மொழி காக்கப்படவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், தமிழ் மொழிக்காக சாதி-மத வேறுபாடுகளை அகற்றி எல்லோரும் ஒன்றுபட வேண்டுமென்றும், அன்று சர்வாதிகாரமாக இந்தியைப் புகுத்திய ஆச்சாரியார் இன்று ஏன் இந்தியை எதிர்க்கிருர் என்பதை விளக்கியும், இந்தி நுழைவைத் தடுத்து தாய் மொழியான தமிழை நாம் காக்கப்பாடுபட வேண்டுமென்றும் கோரினர்.

பழனியப்பபுரம் ஐக்கிய வாலிபர் சங்க மூன்ருவது ஆண்டு விழா

சாத்தான்குளம் தொகுதியைச் சேர்ந்த பழனியப்பபுரம் என்ற சிற்றூரில் 2—11—57-ல், மேற்படி விழா, டாக்டர் விக்டர் டேவிட் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் பணிகள் பற்றி ஓவியர் எஸ்ராடேவிட் பேசிய பின், திரு. அப்பாதுரை, அண்ணு அவர்களைப் பாராட்டிப் பேசினர்.

பின், தோழர்கள் இராசாமணி, ஆ. அண்ணுமலை, குப்புசாமி இரத்தினசாமி ஆகியோர் பேசினர்.

வில்லிவாக்கம் பொது நல மன்றத் துவக்க விழா

கண்ணதாசன் கலந்துகொண்டார்

28—10—57 மாலை 6 மணியளவில், வில்லிவாக்கம் பொது நல மன்றத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் பால சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது; தோழர்கள் கோ. கருணுகரன், கோ. இறைமுடிமணி, ச. வில்லவன், டி. நடராசன் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் கண்ணதாசன் பேசுகையில், மன்றம், ஊருக்கும் நாட்டுக்கும் தொண்டாற்றவும், சர்வகட்சியைச் சேர்ந்தவர்கள் இம்மன்றத்தில் இருப்பதால் அந்தக் கட்சித் தலைவர்களை அழைத்து, அவர்கள் இப்போது நிலவுகின்ற இந்திப் பிரச்சினை போன்றவைகள் மீது தங்களின் எண்ணத்தை வெளியிட ஆவன செய்தல் நல்லது என்று கூறி, 'இந்தி மொழி வளம் அற்றது; இலக்கணம் சரிவர இல்லாதது; என்பதை விளக்கினர்.

தோழர் டி. நடராசன் மன்றத்தைத் திறந்துவைத்தார்.

சென்னை--42-வது வட்ட அழகிரி படிப்பகத் திறப்பு விழா

க. அன்பழகன், ஏ. கோவிந்தசாமி, கே. ஆர். ஆர். கலந்துகொண்டனர்

15—11—57-ல் திருவல்லிக்கேணி மல்லன் பொன்னப்ப முதலித் தெருவில், தோழர் கா. அப்பாதுரையார் தலைமையில் மேற்படித் திறப்பு விழா நடைபெற்றது.

தலைவர் தம் உரையில், முன்னுள் திராவிடர்களின் வளமான வாழ்க்கை முறைகளையும், இன்னுள் மக்களின் அவலநிலைகளையும் விளக்கிப் பேசினர்.

அடுத்து தோழர்கள் மணிவர்மன், நீலநாராயணன் ஆகியோர் பேசினர்.

பின்னர், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள் கலைவாணர் என். எஸ். கே. அவர்களின் சிறப்பியல்புகளையும், கொடையுள்ளத்தையும் விளக்கி, அன்னாரது வாழ்வில் ஏற்பட்ட சில நகைச்சுவை நிகழ்ச்சிகளையும் எடுத்துக்கூறி கலைவாணரின் படத்தைத் திறந்துவைத்தார்.

அடுத்து தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்கள் படிப்பகத்தைத் திறந்துவைத்து கழகக் கொள்கைகளையும், சட்டமன்ற நடவடிக்கைகளையும் விளக்கும் போது குறிப்பிட்டதாவது :—

"சட்டமன்றத்தில் நாம் எண்ணிக்கையில் 15 பேர்தான் என்றுலும், நம்முடைய குரலுக்கு சர்க்கார் அக்கறையோடு செவி சாய்க்கிறது; இதுவரையில் ஏனேதாளே என்றிருந்தவர்கள், இன்று, பேசுகின்ற வார்த்தைகளை எண்ணிப்பார்த்து, அளந்து பேசுகின்றனர்."

இறுதியில் தோழர் க. அன்பழகன் எம்.எல்.ஏ. அவர்கள் பேசுகையில், இந்தி தமிழ் நாட்டில் புகுத்தப்படுவது பற்றியும், இந்தியை எதிர்த்து அன்று படை நடத்திய அஞ்சாநெஞ்சன் அழகிரியின் வீரவரலாற்றை எடுத்துக் கூறியும், அழகிரியின் நெஞ்சுறுதியை—போர்த் திறத்தை நாம் ஏற்று நடக்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

1937-ல் இந்தியைப் புகுத்திய ஆச்சாரியார், 1957-ல் இந்தியை எதிர்ப்பது பற்றி விளக்குகையில், 'மனிதனைப் பாம்பு கடித்தால், அந்தப் பாம்பைக்கொண்டே அந்த விஷத்தைத் திரும்ப உறிஞ்சச் செய்யும் மந்திரவாதியைப் புராணப் படங்களிலே காண்பதுபோல், இன்று ஆச்சாரியார் இந்தியை எதிர்க்கிருர். அவரைப் பாம்பாகக் கருதினுலும் சரி—மந்திரவாதியாகக் கருதினுலும் சரி—இன்று ஆச்சாரியாரால் இந்தி எதிர்க்கப்படுகிறது. இது திராவிட முன்னேற்றக் கழகத்தின் மகத்தான பணி தந்த பரிசு—நமது வெற்றியாகும்" என்றும், இந்தியின் வளமற்ற தன்மை பற்றியும், தமிழின் சிறப்பு பற்றியும் விரிவாகப் பேசியபின் செயலாளர் நன்றி நவில கூட்டம் இனிது முடிவுற்றது.

வடநாட்டு கள்ள நாணயப் பேர்வழிகள்

திண்டுக்கல் சந்தையில் 4 பேர் கைது

சேலம், நவ. 20—

சந்தையில் கள்ள ஒரு ரூபாய் நாணயங்களை மாற்ற முயற்சித்ததாக வடநாட்டைச் சேர்ந்த ஒரு பெண் உள்பட நான்கு பேர்களை ஓமலூர் தாலுகா போலீசார் கைது செய்துள்ளனர்.

அந்த நால்வர் மீதும் இ. பி. கோ. 240, 243, ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. போலீசார் இது சம்பந்தமாக மேலும் புலன் விசாரணை செய்துவருகின்றனர்.

அந்த நால்வரிடம் இருந்தும் 17 கள்ள ஒரு ரூபாய் நாணயங்களை போலீசார் கைப்பற்றியுள்ளனர்.

தாளமுத்து நினைவுப் படிப்பக துவக்கவிழா

காஞ்சி-கல்யாணசுந்தரம் கலந்துகொண்டார்

குணியமுத்தூரில், 10-11-57 மாலை 7 மணிக்கு, தோழர் தங்கமாணிக்கம் தலைமையில் தாளமுத்து நினைவுப் படிப்பகத் துவக்கவிழா நடைபெற்றது.

இந்தி ஏகாதிபத்தியத்தைக் கண்டித்து தோழர்கள் ஈ. த. சண்முகம், பி. சத்தியமூர்த்தி ஆகியோர் பேசினர். இறுதியில் தோழர் காஞ்சி கல்யாணசுந்தரம் அவர்கள் தி. மு. க. சட்டசபை வெளிநடப்பு பற்றியும இந்தி வடவரால் தென்னுட்டின் மீது சுமத்தப்படும் அடாத செயலைக் கண்டித்தும் விரிவுரையாற்றினுர்.

கூட்டத்தில், குணியமுத்தூர் சுண்ணும்புக் காளவாய், நொய்யலாற்று அணைப்பகுதி, குழியூர் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக நிவாரணம் தரவேண்டுமென மாவட்டக் கலெக்டரைக் கேட்டுக்கொண்டும், தாளமுத்து நினைவுப் படிப்பகம் பொதுமக்களிடம் நிவாரணத்திற்கென உதவியைநாடி திரட்டித்தருவதாகவும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

தண்டகாரண்யத் திட்டத்துக்குத் தனி அதிகாரியாம்!

புதுடில்லி, நவ. 22—

உத்தேச தண்டகாரண்யத் திட்டத்தை நிறைவேற்றி வைப்பதற்கு தலைமை நிர்வாக அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கிருர் என்றும், அந்த அதிகாரி, பல நிபுணர்களுடன் சீக்கிரமே அந்த இடத்துக்குச் சென்று, அங்கே மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்தி நடவடிக்கைகள் பற்றிய அறிக்கையொன்றைச் சர்க்காருக்கு அளிப்பார் என்றும். நிபுணர்களின் அறிக்கை கிடைத்த பிறகு, மற்ற நடவடிக்கைகள் பற்றி முடிவு செய்யப்படும் என்றும் மக்கள் சபையில் தகவல் தரப்பட்டது.

'தென்னுட்டின் பொருள்வளம்'

புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் க.அறிவழகன் பேச்சு

15—11—57 மாலை 4 மணிக்கு புதுக்கோட்டை மன்னர் கல்லூரி சரித்திர பொருளாதார மன்றத்தின் சார்பில் தோழர் பி. வி. இராமச்சந்திரன் அவர்கள் தலைமையில் நடந்த சிறப்புக் கூட்டத்தில், தோழர் க. அறிவழகன், 'தென்னுட்டின் பொருள்வளம்' எனும் தலைப்பில் பேசுகையில், 'தென்னுட்டின் பொருள்வளம்' பற்றித் தன்னைப் பேசச் சொல்லியிருக்கும் விந்தையைப் பற்றியும், அந்தப் பொருளாதார வளம் தென்னுட்டில் இல்லாததால் தான் நாடு இந்நிலையிலிருப்பதையும், வறுமையில் வாடுவதையும், வடநாட்டுச் சூழ்ச்சியாளர்கள் எவ்வாறு தென்னுட்டின் உயர்ந்த கனி வளப்பங்களை—அன்று வெள்ளையன் இங்கிலாந்திற்கு எடுத்துச் சென்று நாட்டைச் சுரண்டியதைப்போல—எடுத்துச் செல்கிருர்கள் என்பதையும், தென்னுடு சுரண்டப் படுவதென்பதற்குப் பல அறிஞரின் பேச்சுக்களையும் எடுத்துக்காட்டி, புள்ளி விவரங்களுடனும், பொருளாதார நிபுணர்களின் கருத்துக்களை எடுத்துத் தொகுத்துக் கூறினர்.

கூட்ட ஆரம்பத்தில் திரு. சுபேதானந்தன் வரவேற்பு கூறினுர்; மன்றச் செயலாளர் திரு. நாகராசன் நன்றி நவின்றுர்.

முதலில் சொற்பொழிவு நிகழ்ச்சிக்கே அனுமதிக்க தயங்கிய கல்லூரி முதல்வரே மயங்கும் அளவுக்கு சொற்பொழிவு அமைந்தது குறிப்பிடத்தக்கது.

மழை-வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோருக்கு உதவி

தோழர்களின் சீரிய தொண்டு

சென்னை, நவ. 18—

சென்னை, சிவசண்முகபுரம் ஏரிக்கரை பகுதியில் (சன் தியேட்டர் அருகில்) உள்ள சுமார் 60 குடிசைகள் மழையின் காரணமாக இடிந்து விழுந்துவிட்டதால் அந்தக் குடிசைகளில் வசித்து வந்த சுமார் 150 பேருக்கு அவதி ஏற்பட்டது; 12—11—57 மாலை 7 மணிக்கு வேளாளத் தேனும்பேட்டை 'தமிழ் இளைஞர் முன்னேற்றக் கழக'த்தின் சார்பில் திரு. கே. எஸ். இராசமாணிக்கம் தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் பார்த்தசாரதிபேட்டை தெரு, எண் 50 இல்லத்தில் நடைபெற்றது; தோழர்கள் என். பொன்னுசாமி, ஜி. மாசிலாமணி, ஏ. டேனியல், ஜி. சோமசுந்தரம், தமிழ்ப்பித்தன் ஆகியோர் பேசினர். பின்னர் கழகத்தின் சார்பில் அந்த மக்களுக்கு ஆவன செய்வதென முடிவு செய்யப்பட்டதுடன், பிறகு அப்பகுதி மக்களுக்கு தோழர் தமிழ்ப்பித்தன் முன்னிலையில் உணவு அளிக்கப்பட்டது.

* * *

10—11—57-ல், சென்னை வேளாளத்தேனும்பேட்டையைச் சேர்ந்த ஏரிக்கரை மைதானத்திலுள்ள சிவசண்முகபுரத்தில் குடியிருக்கும் ஏழைகளின் வீடுகளும், பொருள்களும் மழையினுல் நாசமடைந்துவிட்டன. மக்கள் முற்போக்கு மன்றத்தார் நேரில் சென்று பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவிற்காக 11 படி அரிசியும், ரூ. 3-ம் கொடுத்துதவினர்.

* * *

6—11—57-ல், வியாசர்பாடி பகுதியில் மழையினுல் பாதிக்கப்பட்ட சில இடங்களில் உதய சூரியன் படிப்பகம் தன் சொந்தப் பணத்திலிருந்து ரூ. 30 எடுத்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு காபியும் ரொட்டியும் வழங்கியது.

* * *

சென்னை, நவ. 19—

6—11—57-ல் பெய்த மழையால் 35-வது வட்ட கோடம்பாக்கம் சாலிகிராமம் வெள்ளக்காடாக இருந்தது; வெள்ளம் முழங்காலுக்குமேல் உயர்ந்துவிட்டது; பல குடிசைகள் சரிந்து விழுந்தன. 15 குடிசைகள் தரைமட்டமாகிவிட்டன.

உடனே குடிசைவாழ் மக்கள் வாகினி ஸ்டுடியோவிற்குச் சென்று ஸ்டுடியோ அதிபர் திரு. நாகி ரெட்டியாரிடம் முறையிட்டனர்; உடனே அவர் ஸ்டுடியோவில் பணியாற்றும் சுமார் 100 பேர்களை அழைத்துக்கொண்டு குடிசைகளைச் சுற்றித் தேங்கியிருந்த தண்ணீரை, பள்ளத்தாக்கிற்குத் திருப்பிவிடும்படி கோரியதுடன், அவரே ஒரு மண்வெட்டியை எடுத்து தண்ணீரைப் பள்ளத்தில் திருப்பிவிடுவதில் உதவினுர்; இந்த உதவியினுல் இன்னும் பல குடிசைகள் விழாமல் தப்பியது; இந்த பெரும் உதவிக்காக திரு. நாகி ரெட்டி அவர்களுக்கு அந்தப் பகுதியில் உள்ள அம்பேத்கார் நினைவு மன்றத்தின் சார்பிலும், சாலிகிராமப் பொது மக்களின் சார்பிலும் நன்றியும் வணக்கமும் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

விருதுநகர், நாகை கைத்தொழில்பயிற்சி நிறுவனங்கள்

இயந்திரக் கருவிகள் வாங்க நிதி அனுமதி

விருதுநகர், நாகப்பட்டினம் ஆகியவைகளில் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்களை ஏற்படுத்துவது சம்பந்தமாக இயந்திரங்கள், நிலம், கட்டிடங்கள் ஆகியவைகளுக்கான செலவுகளுக்கு அரசாங்கம் அனுமதித்திருக்கிறதாம்.

இந்தப் பயிற்சி நிலையங்கள், சென்ற ஆண்டில் வாடகைக் கட்டிடங்களில் குறைந்த அளவு இயந்திரக் கருவிகளுடன் துவக்கப்பட்டன.

1957—58-ல் நாகப்பட்டினப் நிறுவனம், முதலீடு வகையில் ரூ. 5,38,000-ம்; மூன்றில் ஒரு பங்கு பயிற்சியாளருக்கு மாதம் ரூ. 25 பயிற்சி கால உதவித் தொகை உள்பட நடைமுதல் செலவுகளுக்கு ரூ. 52,520-ம் செலவிட அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறதாம்!

விருதுநகர் நிறுவனம் முதலீடு வகையில் ரூ. 4,41,000; பயிற்சிக் கால உதவித் தொகை உள்பட நடைமுதல் செலவுகளுக்கு ரூ. 51,200—செலவிட அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறதாம்!

இந்தக் கைத்தொழில் பயிற்சி நிறுவனங்கள் மொத்த செலவில் 60 சதவிகிதம்வரை, இந்திய அரசாங்கத்திடமிருந்து நிதி உதவியாகப் பெறத் தகுதியுடையவை என்றும், இந்த இரு பயிற்சி நிறுவனங்கள் ஒவ்வொன்றுக்கும் ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் ஏற்படக்கூடிய மொத்தச் செலவு ரூ. 13.40 இலட்சம் என்றும், கைத்தொழில் நிறுவனங்கள் துவக்க, மாநிலத் திட்டத்தில் மொத்தம் ஒதுக்கப்பட்டிருப்பது ரூ. 53,579 இலட்சம் என்றும் தகவல் தரப்படுகிறது.

★

சென்னை கைத்தொழில் பயிற்சி நிலையம்

அபிவிருத்தித் திட்டம்

சென்னை-தியாகராயநகரிலுள்ள கைத்தொழில் பயிற்சி நிலையத்திற்கு மேற்கொண்டு இயந்திரங்கள், கருவிகள் வாங்கவும், கூடுதலாகக் கட்டிடங்கள் கட்டவும், 1957—58-ல் ரூ 2 இலட்சம் செலவிட அரசாங்கம் அனுமதித்திருக்கிறது.

இரண்டாவது திட்ட காலத்தில் மொத்தம் ரூ. 10,55,00 செலவில், இந்த நிலையத்தில் பெரும் அளவில் அபிவிருத்தி வேலைகளை மேற்கொள்ளவேண்டும் என்பது ஏற்பாடு. அதில் கட்டடச் செலவுகளுக்கு மட்டும் குறிப்பிடப்பட்டது ரூ. 7 இலட்சமாகும்.

இந்தத் திட்டங்களுக்கான செலவை மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் 60-40 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொள்ளும்.

அனுதாபம்

காஞ்சி நகர முன்னுள் தி. மு. க. செயற்குழு உறுப்பினரும், கிளைக் கழகப் பொருளாளரும், இன்னுள் கிளைக் கழகச் செயற்குழு உறுப்பினருமான தோழர் ச. முருகய்யா அவர்கள் 18-10-57-ல் இயற்கையெய்தியதைக் குறித்து காஞ்சி பிள்ளையார்பாளையம், புதுப்பாளையம தெரு, தி. மு. க. கிளை, தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறது.

* * *

சோழவந்தான் தி. மு. கழகச் செயலாளர் கூ. குருசாமியின் தாயார் சின்னம்மாள் மறைவுக்கும்; முன்னுள் பொருளாளர் எஸ். பழனியாண்டவன் தந்தை ச. சங்கரலிங்கம் மறைவுக்கும் சோழவந்தான் தி. மு. கழகம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துகொள்கிறது.

* * *

அரிய நகர் தி. மு. க. முன்னுள் துணைச்செயலாளர் தோழர் இராமச்சந்திரன் அன்னையார் வேதவல்லி அம்மாள் இயற்கையெய்தியமைக்கு அரியநகர் தி.மு. கழகம் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துக் கொள்கிறது.

இந்தியப் பேரரசின் தொழில்துறைக் கொள்கை

எவ்வித மாற்றமும் ஏற்படாதாம்

புதுடில்லி, நவ. 23—

"அந்நியச் செலாவணி வகையில் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ள பற்றாக்குறையின் காரணமாக இந்திய அரசாங்கத்தின் தொழில் துறைக் கொள்கையில் எந்தவித மாற்றமும் ஏற்படாது" என்று மக்கள் சபையில் தொழில் அமைச்சர் ஷா தெரிவித்துள்ளார்.

"அரசாங்கம் ஏற்று நடத்தத் திட்டமிடப்பட்ட எவ்விதத் திட்டமும் தனியாரிடம் ஒப்படைக்கப்படமாட்டாது" என்றும் அவர் கூறியுள்ளார்.

50 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு!

திட்டம் உருவாகிறது

டோக்கியோ, நவ. 22—

சுமார் 50 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு தரும் திட்டமொன்று ஜப்பானில் உருவாக்கப்பட்டுவருகிறது.

இந்த ஆண்டில், 2,500 கோடி டாலர் மதிப்புக்கு ஜப்பான் ஏற்றுமதி செய்துள்ளது; அடுத்த ஆண்டில் 4,730 கோடி டாலர் மதிப்புக்கு ஏற்றுமதியை உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

சீனத் தொழிலாளர் நலத் திட்டம்

விவசாயப் பெருமக்களும் பயன்பெறுவராம்!

பீகிங், நவ. 22—

நவசீனாவில் ஊதியம், ஓய்வு கால ஊதியம், விடுமுறை, மற்ற வசதிகள் பற்றிய சட்டத்தின் விவரங்களை சீன அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் 10 கோடி பேர் பயனடைவார்கள்.

மேலும் 50 கோடி விவசாய மக்கள் பயன்பெறத்தக்க மற்றொரு சட்டமும் உருவாக்கப்பட்டு வருகிறதாம்.

எகிப்துக்கு ரூ. 80 கோடி உதவியாம்!

கெய்ரோ, நவ. 22—

எகிப்தின் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு 70 கோடி ரூபிள் (ரூ. 80 கோடி) பொருளாதார உதவி செய்ய ரஷ்யா முன்வந்துள்ளதாம்.

ஜோர்டான்—இஸ்ரேல் பகுதியில் நெருக்கடி?

அம்மான், நவ. 23—

ஜோர்டான்—இஸ்ரேல் போர் நிறுத்தக் கோட்டின் 400 மைல் தூரத்தில் ஜோர்டான் தக்க இராணுவப் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்றும், எத்தகைய ஆக்கிரமிப்பையும் முறியடிக்கும் பலத்தைப் பெற்றுள்ளது என்றும் ஜோர்டான் இராணுவ அதிகாரி கூறியுள்ளார்.

அ. பொன்னம்பலனார்

சென்னை, நவ. 23—

மலாயாவிலிருந்து கடந்த புதனன்று திரும்பிய தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் நேற்று மாலை காஞ்சிபுரம் சென்றிருக்கிறார்கள்.

இன்று சென்னை திரும்பும் அவர், நாளை 24-ந் தேதி ஞாயிறன்று இரவு 9-30 மணிக்கு தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் மூலம் புறப்பட்டு, சொந்த ஊரான பூவாளூர் செல்கிறார்கள்.

நேற்று, தோழர் பொன்னம்பலனார் அவர்கள் திருமதி டி. ஏ. மதுரம் அவர்களை இல்லத்தில் சந்தித்து, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களின் மறைவுக்கு தனது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொண்டு, அம்மையாருக்கு ஆறுதல் கூறிவந்தார்கள்.

பள்ளிப் புத்தகங்கள் வெளியிடுவது பற்றிய முடிவு

'இறுதியானது' என்கிறார் ஆந்திர அமைச்சர்

ஐதராபாத், நவ. 21—

பள்ளிப் பாடப் புத்தகங்களை வெளியிடும் தொழிலை சர்க்காரே மேற்கொள்ளுவது என்ற முடிவு இறுதியானதாம்!

இந்தத் தகவலைத் தெரிவித்த கல்வி மந்திரி பட்டாபிராம ராவ், இதன் விளைவாகத் தனிப்பட்டோரின் அச்சுக்கூடங்களிலிருந்து எவரேனும் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், அவர்களில் தகுதியுடையோரை வேலைக்கு வைத்துக் கொள்ளுவதற்கு சர்க்கார் தயாராக இருப்பதாகவும் சட்டசபைக்கு உறுதிமொழி தந்தாராம்!

இந்த முடிவு இறுதியானது என்றும், புத்தகங்கள் வெளியிடுவதற்காக இயந்திர சாதனங்கள் கூடத் தயாராகிவிட்டன என்றும், எனவே, இந்த முடிவினை மாற்றிக்கொள்வது என்ற பிரச்சினையே எழவில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

'டீசல்' இயந்திரத் தயாரிப்புத் தொழிற்சாலை

ஆந்திராவில் ஏற்படுத்துவதற்கு இந்திய சர்க்கார் முடிவு

ஐதராபாத், நவ. 23—

கப்பல்களுக்கான 'டீசல்' இயந்திரங்கள் தயாரிப்பதற்கான தொழிற்சாலை ஒன்றை ஆந்திராவில் ஏற்படுத்த இந்திய அரசாங்கம் முடிவு செய்துள்ளது என்றும், இதற்கான செலவு, இடம் முதலியவற்றை ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகிறது.

இந்தத் திட்டத்தை இந்திய அரசாங்கமே ஏற்று நடத்தும்.

ஆந்திராவில் ஏற்பட்ட வெள்ளச் சேதம்

ரூ. 30,000 நிதியுதவி தருகிறார் பண்டித நேரு

வெள்ளத்தின் காரணமாக ஆந்திர மாநிலத்தில் ஏற்பட்ட சேத நிவாரணத்திற்கு பண்டித நேருவிடமிருந்து ரூ. 30,000 நிதி உதவியை ஆந்திர முதலமைச்சர் பெறுவார்.

தங்கத்தில் பேழையா?

ஏற்க முதலமைச்சர் மறுப்பு

தர்மஸ்தலா, நவ. 22—

சர்வதர்ம சம்மேளனம் சார்பில் நடைபெறும் கன்னட சாகித்திய சம்மேளனத்தைத் திறந்துவைக்க மைசூர் முதலமைச்சர் நிஜலிங்கப்பா அழைக்கப்பட்டிருந்தார். அவருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பிதழ் தங்கத்தினால் செய்யப்பட்ட பேழையில் வைத்துத் தரப்பட்டதாம்.

அதை ஏற்க முதலமைச்சர் மறுத்து, அதை தருமஸ்தலமான கோவிலில் வைக்குமாறு கூறிவிட்டாராம்!

மாநில கவர்னர்களின் மாநாடு நடைபெறும்

புதுடில்லி, நவ. 23—

இந்திய மாநில கவர்னர்களின் மாநாடு டிசம்பர் 11, 12-ந் தேதிகளில் புதுடில்லியில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

மாநாட்டிற்குக் குடியரசுத் தலைவர் இராசேந்திரர் தலைமை வகிப்பார் என்றும், பண்டித நேரு கலந்துகொள்வார் என்றும் தெரியவருகிறது.

சிறுபான்மை மொழிகளுக்குப் பாதுகாப்புத் தரப்படுமாம்!

புதுடில்லி, நவ. 22—

"சிறுபான்மையினர் பேசும் மொழிகளைப் பாதுகாக்க, மொழிக்குழு வழிவகைகள் செய்யும்" என்று, மக்கள் சபையில் உள் நாட்டிலாகா அமைச்சர் பந்த் தெரிவித்துள்ளார்.

பாரீஸ், நவ. 22—

பிரெஞ்சுப் பிரதமர் அல்ஜீரியாவுக்கு சீர்திருத்தம் அளிப்பது பற்றிய மசோதாவின்மீது, தேசிய சட்டசபையில் நம்பிக்கை ஓட்டு கோருவாராம்!

ஆங்கில ஆசிரியர்களுக்கு தனிப் பயிற்சி நிலையம்

மக்கள் சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 22—

"ஆங்கிலப் படிப்பின் 'தரம்' குறைந்துவிட்டது என்று பல்கலைக் கழகங்களும், கல்வி நிபுணர்களும் கருதிய காரணத்தினால், ஆங்கில ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி யளிக்க ஐதராபாத்தில் ரூ. 40 இலட்சம் செலவில் ஒரு தனி நிறுவனம் ஏற்படுத்தப்படும்" என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

டெல்லியின் அலட்சியப் போக்கு!

புதுடில்லி, நவ. 22—

மத்திய அரசாங்கத்தின் கைவசம் வடவருக்குப் பழக்கமான உணவான கோதுமை 55,34,000 டன் உள்ளது என்றும், தென்னவருக்கு பழக்கப்பட்ட அரிசி முதலான உணவுத் தானியம் 2,31,000 டன் மட்டுமே உள்ளது என்றும் மத்திய உணவு அமைச்சர் ஜெயின் தெரிவித்துள்ளார்.

கைத்தறிகள் பதிவு எண்ணிக்கை

சென்னைக்கு முதலிடமாம்!

புதுடில்லி, நவ. 22—

"கைத்தறிகளைப் பதிவு செய்வதற்கான உத்தரவின்படி, 1957 ஜூன் கடைசிவரையில் பல்வேறு மாநிலங்களிலும் 15,62,553 கைத்தறிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. சென்னை மாநிலத்தில் தான் மிக அதிக எண்ணிக்கையுள்ள தறிகள் (4,63,376 தறிகள்) பதிவு செய்யப்பட்டுள்ளன" என்று மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டது.

சொத்து வரி 'வசூல்

நிதி அமைச்சர் தரும் தகவல்

புதுடில்லி, நவ. 24—

சொத்து வரி வசூல் மூலம் 1954—55-ல் ரூ. 85,14,461; 1955—56-ல் ரூ. 1,73,26,756; 1956—57-ல் ரூ. 2,10,75,135 வசூலாகியிருக்கிறதென்று தெரியவருவதாகவும், நடப்பு நிதி ஆண்டில் அக்டோபர் இறுதிவரை ரூ. 64,09,654 வசூலாகியிருக்கிறதென்றும் மாநிலங்கள் சபையில் இந்திய நிதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மறைவு

சீர்திருத்த நோக்கமும் ஆர்வமும் கொண்ட திருவாளர் இராமசின்னையா (உரிமையாளர் பாரதி பிரஸ், சிரம்பான், மலேயா) அவர்களின் தமக்கையார், கடந்த 21-ந் தேதியன்று புதுகோட்டை 'அன்பு இல்லத்'தில் இயற்கை யெய்திய செய்தி கேட்டு மிக ஆருத்துயருற்றேன். அன்னாரை இழந்து வாடும் உறவினர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்கள் ஆறுதல் பெறவும் பெரிதும் விழைகிறேன்.

என்று, தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இரயில் கட்டணச்சலுகை தரப்படுவதற்குக் காரணம் என்ன?

நிலைமை விளக்கம்

புதுடில்லி, நவ. 22—

மத்திய சர்க்காரின் 4-வது வகுப்புச் சிப்பந்திகள் விடுமுறையில் செல்லும்போது, பிரயாணக் கட்டணத்தில் 10 சதவிகிதம் மட்டும் கொடுத்துப் பிரயாணம் செய்யலாம்; மீதித் தொகையை இந்திய சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களாம்; ஆனால், அவர்கள் பணியாற்றுமிடம், அவர்கள் சொந்த ஊரிலிருந்து 100 மைலுக்கு அதிக தூரத்தில் இருக்க வேண்டும்

இந்தப் பிரயாணச் சலுகையின் பலன் 1958 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து சுமார் 9 இலட்சம் சிப்பந்திகளுக்கும் அவர்களுடைய குடும்பங்களுக்கும் கிடைக்கும். ஆனால் பிரயாணத்தின் முதல் நூறு மைல்களுக்கு அந்தச் சலுகை கிடைக்காது. மேலும் அச்சிப்பந்திகள் குறைந்தபட்சம் ஒரு ஆண்டு சேவை பூர்த்தி செய்திருக்க வேண்டும்; இச்சலுகை இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை தான் கிடைக்கும்; அவர்களுடைய விடுமுறை 15 நாட்களுக்குக் குறைவில்லாமலும், 'காஷுவல் லீவ்' நீங்கலாக இதரவகை விடுமுறையாகவும் இருக்க வேண்டும்.

இதுவரையில் குறைந்தபட்ச அளவு 250 மைலாக இருந்தது; ஆனால், இந்தச் சலுகை அமுலாகிற 4-வது வகுப்புச் சிப்பந்திகளின் எண்ணிக்கை மற்றவர்களைப் பார்க்கிலும் மிகவும் குறைவாக இருந்துவந்திருக்கிறது. அவர்களில் பெரும்பாலாருடைய சொந்த ஊர்கள் தலைமைக் காரியாலயங்களிலிருந்து 250 மைலுக்குள்ளாகவே இருப்பதாகத் தெரியவந்திருக்கிறது.

மத்திய சர்க்கார் வேலைக்கு நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் சிப்பந்திகள் வரும்படிச் செய்வதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இதுபோன்ற வசதிகள் இல்லாவிட்டால், தொலைதூரங்களிலுள்ளவர்கள் மத்திய சர்க்காரில் வேலை தேடி வருவதற்கு இடையூறாக இருக்கக்கூடும் என்று கருதப்பட்டிருக்கிறது.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம்

111 பேர் நியமிக்கப்பட்டதாக மாநிலங்கள் சபையில் தகவல்

புதுடில்லி, நவ. 21—

அரசியல் சட்டம் அமுலான நாளிலிருந்து, உயர் நீதிமன்றங்களுக்கு 111 நீதிபதிகள் நியமிக்கப்பட்டனர் என்றும், இவர்களில் 110 பேர் இந்தியாவின் பிரதம நீதிபதியின் ஆலோசனையின் பேரில் நியமிக்கப்பட்டவர்களே என்றும், ஒரே ஒரு சந்தர்ப்பத்தில் மட்டும் முதன்மந்திரி, கவர்னர் ஆகியோரின் சிபாரிசுக்குமாறாக மத்திய சர்க்காரே நேரடியாக நியமித்தது என்றும் மாநிலங்கள் சபையில், உள்நாட்டு மந்திரி பண்டித பந்த் தெரிவித்திருக்கிறார்.

உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகள் நியமனம், இந்தியாவின் தலைமை நீதிபதியின் யோசனையின் பேரிலேயே நடைபெறுகின்றன என்றும் அவர் கூறினார்.

இந்தியாவிலிருந்து

ரஷ்யாவுக்குக் குகைப் பாதை

மாஸ்கோ, நவ. 22—

இமயமலைக்கு அடியில் 7½ மைல் நீளமுள்ள ஒரு குகைப் பாதை அமைத்தால் ரஷ்யாவிலிருந்து இந்தியாவுக்குச் செல்லும் தூரம் 500 மைல் குறையும் என்றும், இந்த பாதை அமைக்க 4 ஆண்டுகள் பிடிக்கும் என்றும் செய்தி ஒன்று தரப்பட்டிருக்கிறது.

கழகக் கூட்டம்

★

ஆத்தூர்--நரசிங்கபுரம்

சந்தைப்பேட்டை திடலில்
24—11—57 இரவு 8 மணிக்கு
தலைவர் : டி. கே. மாதவன்
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
எம். பி. சுப்பிரமணியம் எம்.எல்.ஏ.
டி. இருசப்பன் எம்.எல்.ஏ.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

23—11—57 மாலை 6 மணியளவில், சென்னை திருவள்ளுவர் முத்தமிழ் கழகப் பணிமனையில் (10, லாயர் சின்னதம்பி முதலி தெரு) தோழர் க. பாண்டியன் தலைமையில் 'உலக சூழ்நிலையில் நாம்' என்ற பொருள் பற்றிப் பலர் பேசுவர்.

* * *

24—11—57 காலை 10 மணியளவில், சென்னை — பெத்துநாய்க்கன் பேட்டை மக்கள் மன்றப் பணிமனையில் தோழர் கே. எஸ். தினகரன் தலைமையில் 'பண்டைத் தமிழர் நாகரீகம்' என்ற தலைப்பில் பலர் பேசுவர்.

* * *

24—11—57 காலை 10 மணியளவில், சென்னை 11-வது வட்ட தி. மு. கழகப் பணிமனையில் (4/88-ஏ, பிராட்வே) தோழர் கு. சண்முகம் தலைமையில் 'ஆட்சி மொழி' என்ற பொருள் பற்றித் தோழர்கள் பலர் பேசுவர்.

சென்னை 37-வது வட்ட தி. மு. க. பொது உறுப்பினர்களுக்கு:

23—11—57 இரவு 8 மணிக்கு, சென்னை 37-வது வட்டம் (இராயப்பேட்டை) தி.மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் சீனிவாசபுரம் 2-வது தெரு 45ம் எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும்; அவ்வமயம் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்குவரும்.

திருவொற்றியூர் தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு:

24—11—57 காலை 9 மணிக்கு, திருவொற்றியூர் தி. மு. கழகப் பொது உறுப்பினர் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும்; அதுபோது பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

திருக்குறள் வகுப்பு

24—11—57 காலை 10 மணியளவில், சென்னை — வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகச் சார்பில் தனலட்சுமி உயர்தர ஆரம்பப் பள்ளியில் திருக்குறளில் 'கேலயாமை' என்ற அதிகாரத்தை திரு. அடைக்கலசாமி அவர்கள் விரித்துரைப்பார்.

சென்னை கல்விச் சங்கம்

24—11—57 மாலை 4 மணிக்கு, சென்னை, பட்டாளம் ஸ்டாரன்ஸ் ரோடு ஆண் பள்ளியில் மேற்படி சங்கச் சார்பில், 'சங்ககாலம்' என்னும் பொருள் பற்றி திரு. வ. சுப்பிரமணியம் தலைமையில், திரு. தெ. இரா. செயராமன் பேசுவார்.

சென்னை 48-வது வட்ட தி. மு. க. செயற் குழு உறுப்பினர்களுக்கு:

24—11—57 மாலை 6-30 மணியளவில், சென்னை 48-வது வட்டம் (சைதாப்பேட்டை) தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழக மனையில் நடைபெறும். அதுசமயம் பல முக்கிய பிரச்சினைகள் ஆய்வுக்கு வரும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுவது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.